யாழ்ப்பாணம் வலயக் கல்வி அலுவலகம்
மூன்றாந் தவணைப் பரீட்சை – 2019

தரம் : 08	சைவநெறி சுட்டெண்.....	2.00 மணித்தியாலம்

பகுதி - I

- **மிகப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்து கோடிடுக.**

01. மேலான தலைவராக விளங்குபவர்
1) விநாயகர் 2) முருகப்பெருமான் 3) சிவபெருமான் 4) விஷ்ணு

02. தூலலிங்கம் எனப்படுவது
1) கருவறை 2) கோபுரம் 3) நந்தி 4) பலிபீடம்

03. முன்னேச்சரதலத்தின் தலவிருட்சமாக அமைவது
1) வன்னி மரம் 2) வில்வ மரம் 3) அரச மரம் 4) இலுப்பை மரம்

04. வேதசிரசு என்று போற்றப்படுவது
1) சங்கிதைகள் 2) பிராமணங்கள் 3) உபநிடதங்கள் 4) ஆரணியங்கள்

05. நாள் மங்கலம் என்று அழைக்கப்படுவது
1) உபநயனம் 2) திருமணம் 3) பூப்புனித நீராட்டு 4) பிறந்தநாள்

06. சாத்திர நூலாகவும் தோத்திர நூலாகவும் விளங்குவது
1) வேதம் 2) திருமந்திரம் 3) தேவாரம் 4) பெரியபுராணம்

07. ஆணவமலத்தால் மாத்திரம் பீடிக்கப்பட்ட ஆன்மா
1) சகலர் 2) பிரளயாகலர் 3) விஞ்ஞானகலர் 4) மும்மலத்தார்

08. அதர்மம் ஒழிந்து தர்மம் நிலைநாட்டப்பட்ட தினமாக கொள்ளப்படுவது
1) தைப்பூசம் 2) பங்குனி உத்தரம்
3) வைகாசி விசாகம் 4) ஆனி உத்தரம்

09. திருமருகலில் உறைந்திருக்கும் இறைவியின் பெயர்
1) வண்டுவார்குழலி 2) உமாதேவி 3) வடிவாம்பிகை 4) கௌரியம்பாள்

10. இறைவன் தில்லையில் திருநடனம் புரிந்தநாள்
1) ஆவணி ஓணம் 2) ஆனி உத்தரம் 3) பங்குனித்திங்கள் 4) திருக்கார்த்திகை

11. திருத்தொண்டர் தொகையை அருளியவர்
1) சேக்கிழார் 2) திருநாவுக்கரசர் 3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) திருஞானசம்பந்தர்

12. "மண்ணில் நல்லவண்ணம்...." என்ற தேவாரம் பாடப்பெற்ற தலம்
1) திருவாரூர் 2) திருக்கழுமலம் 3) திருமறைக்காடு 4) திருவீழிமிழலை

kalvi.lk

13. சூரியன் மேட இராசியில் புகும்போது கொண்டாடப்படுவது
1) வருடப்பிறப்பு 2) தைப்பொங்கல் 3) தீபாவளி 4) ஆடிப்பிறப்பு

14. முதல் ஏழு திருமுறைக்குள் அடங்குவது
1) திருவாசகம் 2) திருவிசைப்பா 3) திருப்பல்லாண்டு 4) தேவாரம்

15. சரியை நெறியில் வழிபாடு செய்தவர்
1) திருஞானசம்பந்தர் 2) திருநாவுக்கரசர்
3) சுந்தரமூர்த்தி நாயனார் 4) மாணிக்கவாசகர்

16. ஐந்தாங்குரவர் என்று போற்றப்படுபவர்
1) சுவாமி விபுலானந்தனர் 2) சுவாமி விவேகானந்தர்
3) சிவபாதசுந்தரனார் 4) ஆறுமுகநாவலர்

17. மாணிக்கவாசகர் முத்தியடைந்த தினம்
1) வைகாசி மூலம் 2) ஆடிச்சுவாதி 3) ஆனிமகம் 4) சித்திரைச்சதயம்

18. சைவநெறி போற்றும் உயர்ந்த விழுமியப்பண்பாக அமைவது
1) அன்பு 2) ஈகை 3) கருணை 4) தியாகம்

19. பெரியபுராணத்தை அருளியவர்
1) சேந்தனார் 2) சேக்கிழார் 3) கருவூர்த்தேவர் 4) திருமூலர்

20. விரதம் அனுட்டிப்பதன் நோக்கம்
1) பிரச்சினைகள் தீரும் 2) சண்டைகள் ஏற்படாது
3) மனம் ஒருநிலைப்படும் 4) வாழையிலையில் உண்ணலாம்

(20 x 2 = 40 புள்ளிகள்)

Education கல்வி அகரம்

பகுதி - II

- **முதலாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01. பின்வரும் திருமுறைப்பாடல்களுள் இரண்டினை வரிக்கிரமமாக எழுதுக.
1) ஏகநாயகனை.....
2) தில்லைவாழ்.....
3) கற்றாங்கெரி.....
4) இறவாத இன்ப அன்பு.....
5) நீளநினைந்தடியேன்

(8 x 2 = 16 புள்ளிகள்)

02. 'விரதங்களும் பண்டிகைகளும் மனித வாழ்வை மேம்படுத்துகின்றன'
1) பண்டிகைகள் நான்கின் பெயர்களைத் தருக?
2) சிவராத்திரி எத்தனை வகைப்படும்? அவற்றுள் மூன்றினை எழுதுக?
3) விரதம் என்பதன் வரைவிலக்கணம் யாது?
4) புதுவருடத்தன்று மேற்கொள்ளப்படும் சுபகருமங்கள் நான்கு எழுதுக.
ஒன்றினை விளக்குக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

kalvi.lk

03. 'ஆலயம் தொழுவது சாலவும் நன்று'

1) முன்னேச்சர தலத்தில் எழுந்தருளியுள்ள இறைவன், இறைவி திருநாமங்களை எழுதுக.
2) உடப்பு திரௌபதியம்மன் ஆலயச்சடங்கில் இசைக்கப்படும் இசைக்கருவிகள் எவை?
3) கதிர்காமத்தில் நடைபெறும் பூசை முறையினைச் சுருக்கமாக எழுதுக.
4) மூலஸ்தானத்தில் சுதர்சன சக்கரம் காணப்படும் ஆலயம் எது?
அதன் சிறப்புகள் இரண்டு தருக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

04. பதி, பசு, பாசம் மூன்றும் அநாதியானவை

1) பசுவைக் குறிக்கும் வேறு பெயர்கள் யாவை?
2) மூவகை ஆன்மாக்கள் எவை?
3) பசு சதசத்து என அழைக்கப்படக் காரணம் யாது?
4) பதிக்கும் பசுவுக்கும் இடையிலான வேறுபாட்டை எழுதுக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

05. 'பன்னரும் உபநிடத நூலெங்கள் நூலே'

1) சைவசமயத்தவரின் முதல்நூல்கள் எவை?
2) உபநிடதத்திற்கு வழங்கும் வேறுபெயர்கள் 2 எழுதுக.
3) நால்வேதங்களும் எவை?
4) சுவேதாஸ்வதர உபநிடதம் கூறும் விடயங்கள் 3 எழுதுக.

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

06. சமயகுரவர்கள் இறையருள் பெற்ற அருளாளர்கள்

1) சமயகுரவர்கள் பெயர்களை எழுதுக.
2) திருநாவுக்கரசரின் தாய், தந்தை பெயரையும் பிறந்த நாடு, ஊர் என்பவற்றையும் தருக.
3) திருஞானசம்பந்தர் செய்த அற்புதங்கள் 3 எழுதுக.
4) சுந்தர் பாடிய தேவாரங்களின் முதலடிகள் இரண்டை எழுதுக.
அதற்கான சந்தர்ப்பங்கள் யாவை?

(2+2+3+4 = 11 புள்ளிகள்)

07. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.

1) நாட்டார் வழிபாடு
2) கண்ணப்ப நாயனார்
3) விழுமியப் பண்புகள்
4) பண்டிகைகள்

(5½ x 2 = 11 புள்ளிகள்)

Education கல்வி අධ්‍යාපන

Education
கல்வி
අධ්‍යාපන

kalvi.lk